# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 07.03.2019 | 1) இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நிரந்தர அடிப்படையில் பணிபுரியும் ஆண், பெண் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் துலக்குனர்களுக்கு 2018ம் ஆண்டுக்கான சீருடை, காலனி (Shoe) மற்றும் தையற்கூலி வழங்கவும் மற்றும் தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கும் காலனி (Shoe) வழங்கப்பட வேண்டியதுள்ளதால், அரசாணை எண் 283 நாள் 18.06.1996ன் படி தேவையான துணி வகைகள் மற்றும் காலணிகளை Tamilnadu Textile Corporation Ltd., Coimbatore நிறுவனத்தினரிடமிருந்து வாங்குவதற்கும் மற்றும் மேற்படி பணியாளர்களுக்கு தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினமாக தொகை ரூ. 15.00 (பதினைந்து இலட்சம் மட்டும்) இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/4551/17 | 88)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2) 01.04.2016 முதல் 31.03.2019 முடிய தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்கள் மூன்றாண்டு தொகுப்பிற்கு உச்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி மூன்றாண்டு ஒப்பந்தக் காலம் 31.03.2019 உடன் நிறைவு பெறுகிறது இதன்படி 01.04.2019 முதல் இக்குத்தகை இனங்களை உச்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அடுத்த மூன்றாண்டுகளுக்கு ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>எனினும் பாராளுமன்றத்திற்கான பொது தேர்தல் நடைபெறுவதற்கான நன்னடத்தை விதிகள் குறுகிய காலத்தில் அறிவிப்பு செய்ய உள்ள நிலையிலும் தவிர இம்மாநகராட்சிக்கு, பாத்தியப்பட்ட அநேக ஏலம்/குத்தகை இனங்கள் அமையப்பெற்றுள்ள இடமானது சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகள் இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் இவ்வினங்கள் நீங்கலாக ஏனைய குத்தகை இனங்களை 01.04.2019 முதல் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் முறையாக ஒப்படைப்பு செய்வதை முன்னிறுத்தி 01.04.2019 முதல் 4 மாத காலத்திற்கு 2018–19ஆம் மூன்றாம் ஆண்டு குத்தகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து ஒப்படைக்க மாமன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. | 89)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>2) மேற்படி முடிவு செய்யப்பட்டவாறு 01.04.2019 முதல் 15 சதவீத கூடுதல் தொகையினை செலுத்த விருப்பம் தெரிவிக்காத உரிமம்தாரர்கள் பொறுத்தமட்டில் இவ்வகையான குத்தகை இனங்களை மாநகராட்சி பொறுப்பு எடுத்துக்கொண்ட மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்படைப்பு செய்யும் காலம் வரை துறை ரீதியாக வசூல் செய்யவும் இதற்கான செலவினங்களுக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.அ16/0029/19) | |
| | 3) இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மில்லர்புரம் சர்வே வார்டு சி, பிளாக் எண். 32, நகரளவு எண். 2 /1ல் 3,27 ஏக்கர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உள்ளூர் திட்டக்குழும கோப்பு எண். 1547/2018 தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமம் அங்கீகரிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி தார் சாலை அமைக்கப்பட்டும், மழைநீர் வடிகால் வசதி, சிறுபாலங்கள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மூலை, முடுக்குகள் மற்றும் பூங்கா இடம் தெரு விளக்குகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு வாங்குவதற்கான பதிவு செய்யப்பட்ட தானபத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்ய அனுமதி கோரியுள்ளார். எனவே தான பத்திரப் பதிவு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.எப்1/4669/2018/மே.ம. | 90) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதி வார்டு எண். 60 ஹார்பர் கன்ஸ்டிரக்ஸன் சாலை (அய்யன் கோவில் தெரு முதல் துறைமுக இணைப்பு சாலை வரை) மிகவும் சேதமடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளபடியால் மேற்கண்ட பகுதியில் புதிதாக தார் சாலை அமைக்க வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதிதாக தார் சாலை அமைக்க ரூ.49.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப் படுகிறது. | 91) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| வ.எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மேற்கு மண்டல பகுதிக்குட்பட்ட வார்டு எண்.60 ஹார்பர் கன்ஸ்டிரக்ஸன் சாலை (அய்யன் கோவில் தெரு முதல் துறைமுக இணைப்பு சாலை வரை) சேதமடைந்த நிலையில் இருப்பது புதிதாக தார் சாலை அமைக்கும் பணி | 49.25 |
| | **மொத்தம்** | 49.25 |
| | எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 49.25/– இலட்சத்தில் பொதுநிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சிக் கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாநகராட்சிப் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சிக் கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| | 5) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 05.06.2018 அன்று சட்டபேரவையில் விதி 110ன் கீழ் தமிழகத்தில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்டு தூக்கி வீசி எறியப்படும் நெகிழி பொருட்களை தடை செய்யும்பொருட்டு 1986ம் ஆண்டு சுற்றுசூழல் மற்றும் பாதுகாப்பு சட்டம் (மைய சட்டம் 29/1986)ன் படி 01.01.19 முதல் நடைமுறையில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களை உற்பத்தி செய்தல், விறபனை செய்தல், சேமித்து வைத்தல், பிரித்து அளித்தல், கையாளுதல், மற்றும் பயன்பாட்டினை தடை செய்து அறிவிப்பினை வெளியிட்டதனை அடுத்து தொடர்ச்சியாக 25.06.18ம் நாளைய அரசு ஆணை நிலை எண்: 84 வெளியிடப்பட்டுள்ளது.<br><br>மேற்படி நோக்கத்திற்காக அரசானது இந்திய அரசின் 1986ம் ஆண்டு பிப். 10 தேதி தேதியிடப்பட்ட சுற்றுசூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண் S.O. 152(E) உடன் இணைந்த மைய சட்டம் 29/ 126ன் படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>மேற்படி சட்ட நடைமுறைகளை இம்மாநகராட்சியில் நடைமுறை படுத்துவதற்கும் செயல் வடிவம் கொடுப்பதற்கும் பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது | 92) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

## 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு சட்டம் 27/2008 | 1 | 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் 432ஆம் பிரிவில் (இதில் இதன்பின்பு இந்தப்பகுதியில் 2008 சட்டமென கட்டப்பட்டவாறு) 432 ஆம் பிரிவு (30) ஆம் கூறுக்குப்பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுகிறது.<br>(30A) ஒருமுறைமட்டும் பயன்படுத்தி தூக்கி எறிகின்ற நெகிழியை (Plastics) சேமித்து வைத்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், கையாளுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் போன்றவை தடைசெய்வதற்காக. | 432ஆம் பிரிவிற்கான திருத்தம் |
| | 2 | 2008ஆம் ஆண்டு சட்டத்தின 434 ஆம் பிரிவில்:<br>(1) (A) கூறில் நூறு ரூபாய் மற்றும் இருபத்தைந்து ரூபாய் எனும் சொற்றொடருக்காக ஆயிரம் ரூபாய் மற்றும் இருநூற்று ஐம்பது ரூபாய் எனும் சொற்றொடராக திருத்தியமைக்கப்படுகிறது.<br>(1) (B) கூறில் "இருபது ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "இருநூறு ரூபாய்" எனும் சொற்றொடர் திருத்தியமைக்கப்படுகிறது. | 434 ஆம் பிரிவிற்கான திருத்தம். |
| | 3 | 2008ஆம் ஆண்டு சட்டத்தின் 434 ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுகிறது.<br>அதாவது : 434 – A ஒருமுறைமட்டும் பயன்படுத்தி தூக்கிவீசப்படுகின்ற நெகிழியை தடைசெய்வதற்காக இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டம் குறித்து.<br>432 ஆம் பிரிவின் (30-A) கூறின்படி துணை விதியை இயற்றுகையில் 434 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும், குழுவானது துணை விதிகளை மீறுகின்ற நபர் எவரும் VI-A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள குழுவால் நிர்ணயம் செய்யலாகும் தொகைக்கு மிகாத பணத்தண்டம் என்ற முறையில் செலுத்துவதற்கு கடப்பாடு உடையவராதல் வேண்டும் என்பதற்கு வகைசெய்யப்படுகிறது. நபர் நான்காவது முறையாக மீறுவாரானால். இந்தச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள வணிக உரிமம் இரத்து செய்யப்படும். | 434-A எனும் புதிய பிரிவை புகுத்துதல் |
| | 4 | 2008 ஆம் ஆண்டு சட்டத்தின் VI ஆம் இணைப்புப் பட்டியலுக்கு பின்பு பின்வரும் இணைப்புப் பட்டியல் - VI A புகுத்தப்படுகிறது. | |

### இணைப்புப் பட்டியல் VI-A

### பிரிவு 432 (30-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவன்ஙகளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளிதல் | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர நிறுவனங்களில் ஒருமுறை மட்டும் பயன்படுத்திவிட்டு தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய் |

## AMENDMENTS TO THE THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION ACT, 2008

Tamil Nadu Act 27 of 2008

Amendment of Section 432

1 In section 432, of the Thoothukudi City Municipal Corporation Act 2008, (hereinafter in this Part referred to as the 2008 Act) after clause (30) the following clause now being inserted, namely-

"(30-A) for the prevention of storage supply, transport, sale and distribution of use and throw away / Single use plastics"

2 In section 434 of 2008Act:- | Amendment of Section 434

In clause (1) (a) for the expression “one hundred rupees” and “twenty five rupees”, the expression “one thousand rupees” and “two hundred and fifty rupees” respectively now being substituted;

In clause (1) (b) for the expression “twenty rupees”, the expression ‘two hundred rupees now being substituted

3 After section 434 of the 2008 Act, the following section now being inserted, namely:- | Insertion of New Section 434A

“434-A Penalty for breach of by-laws made for prevention of Single use / use and throwaway plastics—Not with standing anything contained in section434, in making a by-law under clause(30-A) of section 432, the council provided that any person who commits the breach thereof shall be liable to pay by way of penalty amount specified in Schedule VI-A. If a person commits the breach for fourth time. the Trade licence issued under this Act will be cancelled.

4 After Schedule VI of the 2008 Act, the following Schedule now being inserted, namely- Schedule VI-A. | Insertion of New Schedule VI-A

## SCHEDULE VI-A

### Penalties for breach of by – laws made under section 432 (30-A)

| **Sl.No** | **Offences** | **Fine for first time offence** | **Fine for second time offence** | **Fine for third time offence** |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | Storage supply transport, sale and distribution of Single use / use and throwaway plastics | Twenty five thousand rupees | Fifty thousand rupees | One lakh rupees |
| 2 | Use, Sale and distribution of Single use/ use and throwaway plastics in large commercial establishments like malls, textile shops and super markets etc. | Ten thousand rupees | Fifteen thousand rupees | Twenty five thousand rupees |
| 3 | Use, Sale and distribution of Single use / use and throwaway plastics in medium commercial establishments like grocery shops, pharmaceuticals shops etc. | One thousand rupees | two thousand rupees | five thousand rupees |

<table>
<tr><td>4</td><td>Use, Sale and distribution of Single use / use and throwaway plastics in small commercial vendors etc.</td><td>One hundred rupees</td><td>Two hundred rupees</td><td>Five hundred rupees.</td></tr>
<tr><td></td><td colspan="4">இதன் அடிப்படையில் மேற்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ளவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.எச்3/425/17</td></tr>
<tr><td></td><td colspan="3">6)மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “சீர்மிகு நகரம்” (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “சீர்மிகு நகரம்” (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந 2) அரசாணை எண். (MA II) எண்.112 நாள் 31.07.2015 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (மாந2) அரசாணை எண். (MS) எண்.109 நாள் 24.10.2017ல் கண்டுள்ள அரசாணையிலும் உத்தரவிடப்பட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில நடைபெற்ற நிர்வாக குழு சுற்றறிக்கை கூட்டம் நடவடிக்கை எண். 05.02.நாள் 27.12.2018இல் தூத்துக்குடி மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து வகை தெரு விளக்குகளையும் சாலைகளின் அகலத்தின் அடிப்படையில் மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட SMART LED விளக்குகளாக மாற்றி அமைத்து மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்களை SMART COMPENET ஆக சேர்த்து Capex Model அடிப்படையில் பொருத்தும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதை மாமன்றம் தனது தீர்மானம் எண். 33 நாள் 05.02.2019ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை எண்.9120/2018/ IHSDP-3 நாள் 19.02.2019ல் ரூ. 1400.00 லட்சத்திற்கு ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் நிர்வாக அனுமதி மற்றும் தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்கள் செயல்முறை எண். 16856/2018/DO-2 நாள் 28.02.2019ல் தொழில்நுட்ப அனுமதி ஆகியவற்றை இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி ஆணை வழங்கும் முன்னர் 60 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து வகை தெரு விளக்குகளுக்கும் முதலிட்டு தர தணிக்கை (Investment Grade Audit) மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>இதனடிப்படையில், மேற்சொல்லப்பட்டவாறு தூத்துக்குடி மாநகராட்சி 60 வார்டு பகுதிகளிலும் உள்ள அனைத்து வகை தெரு விளக்குகளுக்கும் முதலீட்டு தர தணிக்கை (Investment Grade Audit) பணியை உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ளவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.</td><td>93) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 24.75 லட்சத்திற்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) இப்பணிக்கான செலவினத் தொகையினை தற்சமயம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பின்னர் Smart City திட்ட நிதி அல்லது அரசின் வேறு நிதி கிடைக்கும்போது அதனை இப்பணிக்கு ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடவடிக்கைகளை மேற்கொள்டதற்கும், மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். இ1/3209/2015 (S.L. CAPEX/IGA) | |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் ஆரம்ப சுகாதார மையங்களில் நகர சுகாதார செவிலியர்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் பதவி உயர்வினால் ஏற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு AMK மற்றும் CLC நிறுவனம் மூலம் வெளிக்கொணர்வு முறையில் தற்காலிகமாக 7 நகர சுகாதார செவிலியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி சுகாதார செவிலியர்களுக்கு திட்ட இயக்குநர், மாநில சுகாதார சங்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 4782/NUHM/SMS/2017 நாள் 11.12.2018ன் படி வழங்குவது போன்று மேற்படி 7 நகர சுகாதார செவிலியர்களுக்கு மாத ஊதியம் ரூ. 11,000/– வழங்கவும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்1/325/18 | 94) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 8) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, அரசாணை நிலை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தறை (ஆ1) நாள் 04.02.2019ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண். 43 நாள் 04.02.2019ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.எப்1/00753/2019 | 95) பதிவு செய்யப்பட்டது. |
| | 9)அரசாணை நிலை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019ல் உத்திரவின்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி கட்டிடவிதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூரிய விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு விதி எண். 30 (1) (2)ன் படி மாநகராட்சி தொடர் கட்டுமான பகுதிகள் | 96)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | (continuous building) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் (EWS) பகுதி ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்களின் விபரங்களை உறுப்பினர் செயலர், தூத்துக்குடி உள்ளூர்த்திட்டக் குழுமம் அவர்களின் வாயிலாக, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி இணைக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ளவாறு தொடர் கட்டுமானப் பகுதிகள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள் ஆகியவற்றினை உறுப்பினர் செயலர், தூத்துக்குடி உள்ளூர்திட்டக் குழுமம் அவர்களின் வாயிலாக, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. ஒப்புதல் வழங்கலாம்.<br>2. பட்டியலில் கண்டுள்ளவாறு தொடர் கட்டுமானம் பகுதிகள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள் ஆகியவற்றினை உறுப்பினர் செயலர், தூத்துக்குடி உள்ளூர்த்திட்டக் குழுமம், அவர்களின் வாயிலாக, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>ந.க.எண்.எப்1/00753/2019 | |
| | 10) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ன் விதி 14ல் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாமன்ற தீர்மானம் எண். 171 நாள் 08.10.2018ன் படி கட்டிட உரிமக் கட்டணம் மற்றும் இதரக்கட்டணங்கள் 31.03.2012க்கு பின்னர் திருத்தியமைக்கப்பட்டு 01.11.2018 முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே கட்டிடம் கட்டுவதற்கு அனுதி கோரிய விண்ணப்பங்களுக்கு கட்டிட அனுமதி தொடர்பான உரிம கட்டணத்தினை ஏற்கனவே வசூலிக்கும் தொகையிலிருந்து கூடுதலாக 15 சதவீதம் வசூலிக்கவும், மேலும் ஒரு முறை கால நீடிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டண விகிதம் முழுவதும் செலுத்தப்பட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மேற்படி கூடுதலாக 15 சதவீதம் வசூல் செய்யப்படும் பொருட்டு இதனை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து அமுல்படுத்த அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பிரசுரம் செய்ய ஆகும் செலவீனத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.<br>ந.க.எண்.எப்1./00753/2019 | 97) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 7.3.19

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி